

# ஞான கங்கா

கங்கா மா

# ஞான கங்கா

## கங்கா மா

*First Edition:* March 2021

***Published by:***

Sri Jnana Ganga Mandiram
Tiruvannamalai – 6060603
Tamil Nadu – India
Email: srijnanagangamandiram@gmail.com

# முன்னுரை

ஆன்மீக நோக்கத்துடன் சிந்தித்தால், இவ்வுலகின் மனிதர்களை மூன்று வகையாக வகுக்கலாம்:

1. மெய்ப்பொருள் அறியாதவர்கள் (அஞ்ஞானிகள்)
2. அறிய முயற்சிப்பவர்கள் (ஜிஞ்ஞாஸு)
3. அறிந்தோர் (ஞானி)

இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், சிறிதும் அறியாதவர்க்கும், முழுதும் மெய்ப்பொருளில் நிலைத்தவர்க்கும், இவ்வுலகின் இயல்பைப் பற்றி யாதொரு சந்தேகமும் இருப்பதில்லை. பொருள் அறிய முயற்சிப்பவரே, இந்த நிச்சயமின்மைக்கு உள்ளாகின்றனர், விசாரமும் செய்கின்றனர்.

தூய்மையான லட்சியம் கொண்டோர்க்கு, ஆண்டவன் அருளால், ஒரு குரு புலப்படுகிறார். குருவின் சம்பந்தம் பெற்ற சீடர், மெதுவாக மற்ற எல்லா விஷயங்களிலிருந்தும் விடுபட்டு, சீரான விவேகமும், பற்றின்மையும் பெற்றவராகிறார். தானே விரும்பி குரு பாதத்தில் அடைக்கலம் புகுந்து, உபதேசம் பெற்று, குரு காட்டிய வழியில் செல்கிறார். வேறு விதமாக கூறினால், அச்சீடர் மற்றெல்லாவற்றையும் அகற்றி மெய்ப்பொருளாகிய ஆன்மாவையே கோருகிறார். கடோபநிஷத்தில், 'யம் ஏவ ஏஷஹ வ்ரிணுதே தேன லப்யஹ' என்ற சொல் மிகவும் பிரசித்தம். அதாவது, 'யாதொருவன் யாதும் துறந்து ஆன்மாவை நாடுகிறானோ, அவனுக்கே அது அறியப்படுகிறது'.

புனிதமான திருவண்ணாமலை தலத்தில், நேசத்துடன் “அம்மா” என்று அழைக்கப்படும் கங்கா மா அவர்கள், பொதுவான பார்வையில் படாவிட்டாலும், மெய்ஞ்ஞானம் பெற ஏங்கும் கண்களுக்கு புலப்படுகிறார். சில வருடங்களாக, பல பக்தர்கள், ஆன்மீகத்தில் ஏற்படும் சந்தேகங்களை அகற்ற வேண்டியும், அத்யாத்மீக பயிற்சியையும் பற்றி கேட்ட கேள்விகளுக்கு, அம்மா அருளிய உபதேசங்கள் மற்றும் அறிவுரைகளில் சில இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

விடாமுயற்சியுடன் மெய்ப்பொருளை நாடி, அதில் இருத்தலே தன் குறிக்கோளாக கொண்டவர்களுக்கே, இச்சிறிய புத்தகத்தில் பதிந்த ஞான முத்துக்கள். இவ்வுபதேசங்கள், ஸூத்ரம், அதாவது பழமொழி போல் சிறு சொற்கள் கொண்ட, பெரும் அர்த்தங்கள் படைத்த உருவத்துடன் அமைந்துள்ளது. எனவே, இப்புத்தகம் மேலோட்டமாக படிப்பதற்கு அல்ல. ஆழ்ந்த விசாரம் செய்வதற்கே. உள்ளில் அழைத்துச் சென்று உள்ளத்தில் நிறுத்த வல்ல சொற்கள் இவை. முக்கியமாக, இச்சொற்கள் ஆன்மானுபவத்தில் திளைக்கும் அம்மாவின் ஸ்வாத்மானுபவத்தை வெளிப்படுத்துகிறது.

ஆன்ம தாகத்துடன் ஞானத்தை நாடுவோர்க்கு, ஆண்டவன் அருளால், இப்புத்தகத்தின் வாயிலாக மிக்க பலனும், ஆன்மீக மலர்ச்சியால் பிறந்த பயனும், பெற வேண்டுகிறேன்.

ஹரி ஓம்.

சுப்பு வெங்கட்கிருஷ்ணன்

# பொருளடக்கம்

1. குரு............................................. 1

2. பக்தி ........................................... 3

3. சரணாகதி..................................... 4

4. உண்மை ஞானம்......................... 6

5. மரணம்.........................................10

6. ஆத்மா .........................................11

7. ஆன்மீக பாதையில் அவசியமான தீரம்........................13

8. முமுக்ஷுக்களுக்கான வழிமுறைகள் ...............................14

9. ஞானி...........................................17

10. அருள்...........................................19

11. கருணை.......................................21

12. ஜீவன் ...........................................22

13. மனதின் தன்மை..........................26

14. மெய்யறிவு...................................28

# குரு

1. சத்தியத்தை அடைய இரு வழிகளே உள்ளன. உலகம் முழுவதையும் உனது குருவாக பார்த்தல், அல்லது உனது குருவையே உலகம் முற்றுமாக பார்த்தல்.

2. காந்தம் போல் குருவும் (ஆத்மாவாக) அருளினால், ஒருவனை தன்னிடம் ஈர்க்கிறார். தன் முயற்சியின்றி இயல்பாக குருவிடம் செல்வதே பாதை எனப்படும். குரு, அருள், பாதை எல்லாம் ஒன்றே.

3. குரு த்வைதத்தை ஆதரிப்பதில்லை. யாராவது த்வைதத்தை உள்ளே வைத்துக் கொண்டிருந்தால், அதை அகற்றுகிறார்.

4. குரு/இறைவனிடம் உள்ள உண்மையான நெருக்கம் என்பது, அவன் விருப்பப்படி சுதந்திரமாக உன்னை உருவாக்க அனுமதிப்பதே.

5. குரு அருளால் பல ஜென்மங்களின் படிப்பினைகளை (பாடங்களை) குறுகிய காலத்தில் கொடுக்க முடியும்.

6. உள்ளே சரியான விவேகம் அமையப் பெற்றால், வெளியே குரு தேவையில்லை. ஏனெனில், விவேகமே உள்ளே குருவாகும்.

7. குருவும், குரு வசனங்களும் இரண்டல்ல. குருவின் மேல் தோன்றும் அன்பு தான், குரு வசனங்களின் மேல் தோன்றும் அன்பாகும். குரு வசனங்களில் தோன்றும் அன்பு, இயல்பாகவே குருவிடம் அன்பிற்கு கூட்டிச் செல்லும்.

8. குரு உன் கேள்விக்கு பதில் அளிப்பதில்லை. அவர் உன்னுள் இருக்கும் விடையிற்கே அழைத்துச் செல்கிறார்.

9. உனது சாஸ்திர ஞானத்தால் குருவை திருப்தி படுத்த முடியாது. அவர் கேட்பது 'உன்னையே'.

# பக்தி

10. சத்தியத்திற்கான ஏக்கமே குருபக்திக்கு கூட்டிச் செல்லும். சத்தியத்திற்கான தாகம் தீவிரமாகும் போதும், அதனுடன், அருள் ஆத்மானுபவத்தை கொடுக்கும் போதும், ஹ்ருதயத்தில் நன்றியுணர்வு மலர்கிறது. இவ்வுணர்வே குரு பக்தி.

11. நிஜமான பக்தி உண்டாவது பக்தனே இல்லாமல் போகும் போது தான். பிறகு எஞ்சி இருப்பது இறைவன் மட்டுமே.

12. பக்தியின்றி ஞானம் முழுமையாகாது. ஞானமின்றி பக்தியும் முழுமை அடையாது. இரண்டும் சேரும் போது பூர்ணமாகிறது.

# சரணாகதி

13. நாம் பூர்ணமாகும் முன்னம், பூஜ்யமாக வேண்டும்.

14. எப்போது சித் (உணர்வு) ஜடத்துடன் (அகந்தை/மனம்) தொடர்பில் வருகிறதோ, அப்போது அது ஜடத்தன்மையை இழக்கிறது. இதுவே 'சரணாகதி' எனப்படும்.

15. ஒருவனுக்கு குரு மற்றும் இறைவனிடம் நிபந்தனையற்ற சரணாகதி உண்டாகும் போது, அருளால் சரணாகதி பூர்ணமடைகிறது. நிபந்தனையற்ற சரணாகதியில் இருப்பது ஜீவனின் கடமை. பிறகு, அருள் தன் சக்தியால் சரணாகதியை பூர்ணமாக்குகிறது. அருள் எப்போதும் நிபந்தனையற்றதே. எப்போது நாம் நிபந்தனையற்ற சரணாகதியில் உள்ளோமோ, அப்போது மட்டும் தான் அருளை பூர்ணமாக பெற முடியும்.

16. ஒருவனிடமுள்ள, தன்னால் தனி மனிதனாக இருக்க முடியாது, என்கிற குணமே 'சிஷ்யத்வம் ' (சிஷ்யனாக இருத்தல்) ஆகும்.

# உண்மை ஞானம்

17. ‘ஆத்மஞானம்’ ஒன்றே எல்லோராலும் சமமாக பெறக்கூடியது. இது புதிதாக கற்பிப்பதோ, ஒருவர் கையிலிருந்து கொடுப்பதோ அல்ல.

18. நிஜமான ஞானம் உதிக்கும் போது பக்தியும், சமர்ப்பணமும், பணிவும் தானே உள்ளே தோன்றும். பழம் தரும் மரத்தின் கிளைகள் தானே வளைவது போன்று.

19. ’நான் யார்’ என்பதை அறிவதே கடவுளை அறிவதாகும். கடவுளை அறிவதே ‘நான் யார்’ என்பதை அறிவதாகும்.

20. நான் எதனுடனும் (இறைவனுடன் கூட ’நான் கடவுள்’ என) என்னை பாவிக்கும் போது குறுக்கப்படுகிறேன். எந்த உபாதியையும் பற்றாத போது, நான் எனது நித்தியமான, எல்லையற்ற தன்மையை உணர்கிறேன்.

21. அறிய முடியாததை அறிய வேண்டின், முன்பே அறிந்ததாக எண்ணுபவற்றை, நீ 'அறியவில்லை' என அறிந்து கொள்ள வேண்டும். அறியாத நிலையில் இருந்து கொண்டு, முன்பே அறிந்ததை நீ விட்டு விட வேண்டும்.

22. காரணமும், காரியமும் த்வைதம் உள்ள போது தான் உள்ளது. காரணத்தை பற்றுவதும் மாயையை பற்றுவதே. உனது பிறப்பிற்கே ஒரு காரணமும் இல்லை. நீ பிறக்கவே இல்லை.

23. கனவு உள்ள போது மட்டுமே விழிப்பு ஏற்படுகிறது. கனவு காண்பவனை அறியும் போது, கனவு கலைகிறது. அது போலவே, வாழ்வு எனும் கனவை பார்ப்பவனின் மூலத்தை அறியும் போது, இக் கனவு முடிகிறது. உண்மையில் கனவும் இல்லை, விழிப்பும் இல்லை.

24. பற்றுதல் அனைத்தும் பொய் என தெளிதல் ஒன்றே, பந்தங்களில் இருந்து விடுபட வழியாகும். உனக்கு பற்றுதற்கோ

அல்லது விடுவதற்கோ ஒன்றும் இல்லை. நீ உள்ளபடிக்கே இரு. ஆத்மாவின் சுபாவமே பற்றின்றி இருப்பது தான்.

25. உயர்ந்த சாதனை புரியும் போதும், ஸ்தூலமான விவகாரத்தில் உள்ள போதும், ஆத்மா சமமாகவே இருக்கிறது. எந்த உயர்ந்த ஆன்மீக சாதனையாலும் ஆத்மாவிற்கு அடைய எதுவும் இல்லை. ஸ்தூலமான செயல்களால் எதையும் இழப்பதும் இல்லை. இதை அறிந்து கொண்டு உனது சாதனையை தொடர்வாய்.

26. பார்ப்பவனை பார்க்கும் போது நான் முக்தனாகிறேன். விஷயங்களை பார்க்கும் போது நான் பந்தப்படுகிறேன்.

27. ஒருமை என்பது வெளியில் அல்ல. இரு பொருட்கள் எப்படி ஒன்றாகும்? உடல், மனம் மற்றும் அகங்கார நிலையில் எல்லாம் ஒன்றாக முடியாது. உணர்வு நிலையில் மட்டுமே ஒன்றாகும். அங்கே ஒன்றாவது மட்டுமன்றி, இருப்பது ஒன்றே.

28. ஆத்மாவை பற்றிய அறிவு, தர்க்க வாதத்திற்கு உரியதல்ல. அது அனுபவத்திற்கு வர வேண்டிய அறிவு.

29. முழுமையான ஞானமே துயர் நீக்கமும், முக்தியும் கொடுக்கும்.

# மரணம்

30. வாழ்வதற்கு உள்ள ஆசையே, மரண பயத்தின் காரணம்.

31. மரணபயமும் ஓர் எண்ணமே. மரணம் என்பது இயல்பான நிகழ்வாகும்.

32. நீ பிறப்பின் காரணத்தை ஏற்றுக் கொண்டால், அதன் விளைவே மரணம்.

33. எப்பொழுதெல்லாம் அகங்காரம் 'எனது' என எண்ணியவைகளில் தனது பற்றுதலை இழக்கிறதோ, அவ்வப்பொழுதெல்லாம் அது அகங்காரத்தின் சிறு மரணமேயாகும்.

34. போதமற்ற நிலையில் ஏற்படும் அகங்கார இறப்பு உடம்பின் மரணமாகும். போத நிலையில் ஏற்படும் அகங்கார இறப்பே 'சமாதி'.

# ஆத்மா

35. நான் (ஆத்மா) எதிலும் ஒட்டவும் இல்லை, விலகவும் இல்லை. அது அதுவாகவே இருக்கிறது.

36. ஆத்மாவிலிருந்து தனிப்பட்ட எனது நிலையே சுயநலம். ஆத்மாவை உணர்தலே தன்னலமற்ற நிலை.

37. நாம் ஆத்மாவை அனுபவிக்க இயலாது. ஏனெனில், ஆத்மா எல்லா அனுபவங்களின் அனுபவமாய் உள்ளது.

38. பகவானை (ஆத்மாவை) நாம் நினைக்க முடியாது. ஏனெனில், அது சுட்டறியும் பொருளல்ல. மற்ற அனைத்து பொருட்களும் எண்ணத்திற்கு உட்பட்டது. பகவான் நமது இருப்பு நிலையாகும். இதர அனைத்தும் எண்ணம், உணர்ச்சி, அனுபவம் மற்றும் நுகர்பவைகளாய் இருப்பினும், அவை அதுவன்றி தனித்து உள்ளதல்ல.

39. நிறைவு ஆத்மாவின் இயல்பு. உடல் மற்றும் மனதினுடையதல்ல.

40. இவ்வுலகில் அனைத்தும் சரியாக இருந்தால் எவரும் இறைவனையோ, ஆத்மாவையோ தேட மாட்டார்கள். உலகம் குறையுள்ளதாக இருப்பதால் தான், நாம் நிறை பொருளாயுள்ள இறைவனை/ ஆத்மாவை தேடுகிறோம்.

41. 'நான்' இருப்பதனால் மட்டுமே அத்யாத்மீக பயணமும் உள்ளது. எல்லா அத்யாத்மீக முயற்சிக்கும், சாதனைக்கும் நானே சாட்சியாய் இருந்து, முடிவில் என்னையே அடைகிறேன்.

# ஆன்மீக பாதையில் அவசியமான தீரம்

42. நிஜ வலிமை அகங்காரத்தினது அல்ல. அது சத்தியத்தினுடையது.

43. 'நான்' என்பதை எந்த குணங்களும் இன்றி சிந்திக்கும் போது, மனம் நிச்சலமாகிறது. ஆனால் மனதால் அங்கே இருக்க முடியாமல், பலத்துடன் வெளி வந்து, விஷயத்தை பிடிக்கிறது. மனதை திருப்பி, மீண்டும் சுத்தமான 'நான்' என்பதில் கொண்டு வந்து இருத்துவதே வைராக்கியம்.

44. அகத்தின் தீரம் என்பது விஷயங்களை ஞானத்தின் வெளிச்சத்தில் பார்ப்பதே.

45. உலகமே குலுங்கினாலும் கூட நீ ஆடாத சத்தியத்தில் ஸ்ரத்தை வை. அந்த பாதுகாப்பு ஒன்றே உனக்கு உள்ளது.

# முமுக்ஷுக்களுக்கான வழிமுறைகள்

46. ஒருவன் மேலும், மேலும் சாஸ்திரங்களை படிக்க ஆசைப்படுவதற்கு, சஞ்சலமான புத்தியே காரணம். இது நிற்கும் போது தான், ஒருவனால் உண்மையில் உள்முகமாக திரும்பி, ஆத்மாவில் நிலைத்திருக்கும் திருப்தி நிலையை அடையமுடியும்.

47. 'ஸ்ரத்தை' என்பது ஒருமுக சிந்தனையோ, தியானமோ அல்ல. மனது ஒருமுகப்படுத்தும் விஷயங்கள் அனைத்தையும் இழக்கும் போது, நீ இயல்பாகவே உணர்வில் இருக்கிறாய். உணர்வில் எல்லாம் அடக்கம்.

48. 'சும்மா இரு' இந்த உபதேசம் ஆத்மா-விற்கோ, உடம்பிற்கோ அல்ல. இது அகங்காரத்திற்கு தான்.

49. நிறைவே நிஜ சன்யாசத்தை கொடுக்கும். குறையுள்ள நிலை அல்ல.

50. ‘ஒழுக்கம்’ என்பது மனதின் ஈர்ப்பில் (வாசனைகளில்) இருந்து விலகுவதாகும். அகங்காரத்தை உணர்வின் கண்காணிப்பில் வைக்க வேண்டும். வெளி ஒழுக்கமும், யோகமும் இதனுள் அடக்கம். முன் சொன்ன அக ஒழுக்கமே நேர் வழி. இதனால் மட்டுமே அடிப்படையான மாற்றம் ஏற்படும்.

51. ’நான் ப்ரம்மம்’ என்கிற கருத்தை, ஆத்மாவை பற்றி எனக்கு புரியும், எனக்கு தெரியும் என்று எண்ணுபவனுடன் (மனது, அகங்காரம்) சேர்க்காதே. அறிபவன் இல்லாத போது இருப்பது ப்ரம்மமே.

52. மஹான்களின் சரிதங்களை படிக்கும் போது, சில சமயம் மனதில், அவர்களுடன் தன்னை ஒப்பிட்டு, மஹான்களை போன்ற வெளி வேஷத்தாலும், செயல்களாலும் முக்தி பெறலாம் என்கிற தவறான எண்ணம் ஏற்படலாம். ஒவ்வொரு ஜீவனின் வழியும் தனியானது. மஹத்துகளின் வாழ்க்கை சாரத்தை எடுத்து, அதை நமது சாதனைக்கு பயன்படுத்த வேண்டும்.

53. ‘முக்தி’ ஒரு ஆசையாகும் போது, அதை அடைய ஆசைப்படுபவன் எஞ்சி நிற்கிறான். அது தேவையாகும் போது, பந்தங்களில் இருந்து விடுபடுவதும் இயல்பாகவே அவசியமாகிறது.

54. எனக்கு சத்தியத்தின் மீது அன்பு வந்தால், அதை அடைவதே எனது தேவை என்கிற போது, அதற்காக முனைப்படும் செய்கை முழுதும், தன் முயற்சி இன்றியதாக அமையும்.

55. எது சரியான செயல்? எப்போதெல்லாம் எனது தனித்தன்மையை இழக்கிறேனோ, அப்போது சரியான செயல் என் மூலம் நடக்கிறது. ஏனெனில், அங்கே செயல் புரிபவன் இல்லை.

56. உலகில் உள்ள ஆர்வம் மறைந்து, ’போதும்’ என்கிற போது மட்டுமே, எனது முழு கவனமும் ஆத்மாவின் மேல் விழும்.

# ஞானி

57. சுத்த போதத்திற்கு தனது இருப்பு நிலையை தெரிவிக்க கை, கால், வாய் எதுவும் இல்லை. பாக்கிய வசத்தால் ஞானி, போதத்திலிருந்து வேறுபட்டவராக இல்லாததால், தன் அனுபூதியால், அந்த நிலையை என்ன, எப்படி என்று விளக்குகிறார்.

58. ஞானி ஒரே சமயத்தில் பூர்ணமாகவும், வெறுமையாகவும் இருக்கிறார். அவர் மனதால் வெறுமையாகவும், ப்ரம்மனில் பூர்ணமாகவும் உள்ளார்.

59. ஞானி அலட்சியமானவர் அல்ல. அவர் அப்படி தோன்றுவது, பார்ப்பவர்களின் மனதிற்கு வேறுபாடுகள் மட்டும் தெரிவதால் தான். அலட்சியமாக தெரிவது வேறுபாடுகள் இருப்பதால் தான். அலட்சியம் என்பது கூட ஒரு மன நிலையே. ஆனால் ஞானியின் ஸ்திதியில் எல்லாம் அடக்கம். அங்கே அலட்சியமோ, வேறுபாடோ இல்லை.

60. கருத்துக்கள், பந்தங்கள் மற்றும் ஆசைகளுடன் நாம் வாழ்கிறோம். இவை யாவும் வாழ்வின் எதிர்மறைகளாகும். வாழ்க்கை ஒரு வழியில் செல்லும் போது, நாம் அது வேறு விதமாக அமைய ஆசைப் படுகிறோம். ஆனால் ஒரு ஞானி, வாழ்வின் போக்கிலேயே முழுதும் செல்கிறார்.

61. பெரு மகிழ்ச்சியான அனுபவமும் (அத்யாத்மீகமே ஆனாலும்) ஞானிக்கு ஒரு இடையூறு தான்.

# அருள்

62. அருள் என்பது ஆத்ம சக்தி. அது ஆத்மாவை அடையாளம் காட்டி, ஒருவனை அதில் நிலை பெறச் செய்து, அகந்தையை முற்றிலும் அழிக்கிறது. அருளின் வடிவமே குருவாகும்.

63. அருளின் செயல் 'நான் யார் அல்ல' என்பதை தொடர்ந்து தெரிவிப்பதே.

64. நாம் நிபந்தனையற்ற சரணடைந்த பின், அருளால் ஆட்கொண்டதை புரிந்து கொள்ள, ஓர் அறிகுறி தான் உள்ளது. நமது திட்டம் மற்றும் எதிர்பார்ப்புகளை தாண்டி, வாழ்க்கை அருட்செயலால் நடப்பதாகி விடும். நமது பிடிமானம் முழுதும் இழந்து, அருளின் ஆதிக்கத்திற்கு சாட்சியாகி விடுவோம்.

65. மனதாலும், புத்தியாலும் ஆத்மாவை கற்பனை செய்யத் தான் முடியும். அருள் போதத்தினால் மட்டுமே அதை அறிவித்து,

‘ஆம்’ என்கிற நிச்சயத்தை உள்ளிருந்து கொடுக்க முடியும்.

66. ஆத்மசாக்ஷாத்காரம் எந்நேரமும் நிகழலாம். ஆத்மாவின் அருட்போதம் தன் இருப்பு நிலையை உள்ளே உணர்த்தினால், ‘நான் யார்’ என்பது விளங்கும்.

67. உன் முன்னால் நிகழ்பவை எல்லாம் அருளின் செயலே. நடப்பது அனைத்தையும் ஆசீர்வாதமாக ஏற்றுக்கொள்.

# கருணை

68. கொடுப்பவன் இன்றி, கொடுக்கும் செயலே கருணையாகும்.

69. கருணையின் அதி உயர்ந்த வெளிப்பாடே 'குரு தத்துவம்' எனப்படும்.

70. நிஜமான கருணை உண்மையான வைராக்கியத்தில் இருந்து தான் வருகிறது.

71. இறைவனால் உன்னிடம் அனுதாபத்தினால் கருணை காட்ட முடியாது. உனது தாங்கும் திறனை (திதிக்ஷா) பார்த்து தான், அவனால் கருணை காட்ட முடியும்.

# ஜீவன்

72. ஜீவன், ஈஸ்வரனே தான். ஜீவன் உடலை 'நான்' என்றும், அருகில் உள்ளவர்களை 'எனது' என்றும், தன்னை ஒரு ஆயுட்காலத்திற்கு உட்பட்டவன் என்றும் குறுக்கிக் கொள்கிறான். இந்த கட்டுப் பாடுகளை விடும் போது, எஞ்சி இருக்கும் ஜீவன், ஈஸ்வரனிலிருந்து வேறுபட்டவனல்ல.

73. ஒவ்வொரு ஜீவனும் தனது செயல்களுக்கு உரிமை கொண்டாடுகிறது. ஆனால் சாதகமற்ற விளைவுகளுக்கு மட்டும் ஈஸ்வரனிடம் முறையிடுகிறது.

74. நாம் அகந்தையுடன் தோல்வியுறும் போது, துன்பமடைகிறோம். அகந்தையற்று தோல்வியுறும் போது, சௌக்கியமாய் இருக்கிறோம். அகந்தையுடன் தோல்வி அடையும் போது, நாம் தோல்வியை ஏற்க முடியாமல், ஆனால் வெற்றி பெறும் ஆசையால், துன்பமடைகிறோம். அகந்தை

அற்று தோல்வி அடையும் போதோ, நாம் தோல்வியை ஏற்றுக்கொண்டு, வெற்றி பெறுவதில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாததால், சமாதானம் அடைகிறோம். அல்லது, தோல்வி அகங்காரத்திற்கே, எனக்கல்ல என்கிற தெளிவு ஏற்படுகிறது.

75. எப்போது பயம், சந்தேகம், நம்பிக்கையின்மை மற்றும் சோகம் உள்ளதோ, அப்போது அகங்காரம் வேலை செய்கிறது என அறிந்து கொள். எப்போது சாந்தி, திருப்தி மேலும் ஆனந்தம் உள்ளதோ, அப்போது அகங்காரமற்று, அங்கே ஆத்மா ஒளிர்கிறது என அறிந்து கொள்.

76. எப்போது அகங்காரம் எதுவும் செய்ய முடியாத முழு இயலாமையை உணர்கிறதோ, அப்போது அது (அகங்காரம்) அருளின் சக்திக்கு அடங்குகிறது. அகங்காரம் தனது வலுவின்மையை அனுபவப் பூர்வமாக அறிவதும் அருளால் தான். ஏனெனில், அகங்காரத்திற்கு தனது தோல்வியை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

77. ‘நான்’ எனும் தன்மையில் தான், விஷயங்கள் அனைத்தும் உள்ளன. அகங்கார தியாகத்தால், விஷயங்கள் உண்மையாகவே இருக்கிறது என்கிற எண்ணம் தானே மறைகிறது. அகங்காரம் என்பதே இல்லை, என்று உணர்வதே நிஜமான தியாகமாகும்.

78. புறநிலை (வெளி விஷயங்கள்) யதார்த்தத்தின் காரணம், அகநிலையின் (அகங்காரத்தின்) உண்மையே.

79. ‘நான்’ எனும் தனித்தன்மை எப்போதும் கடந்த காலத்துடனே சம்பந்தப்பட்டு, தனது சொந்தக் கதையிலேயே சிக்கிக் கொண்டுள்ளது. ஆனால் நிகழ்வில் எந்த விருத்தாந்தமும் இல்லை.

80. அகங்காரம் ஒரு பிழையல்ல. அது ஒரு பொய்யான மறைப்பு. இதை அறிவது ஞானம்.

81. ஹ்ருதயத்தில் ஜீவன் அடங்குவது தான் ‘ஜீவ சமாதி ’. நாம் வாழும் போதே, ஜீவனுக்கு உள்ளே சமாதி கட்ட வேண்டும். அப்படிப்

பட்டவர்களுக்கு, மறைந்த உடலை எரிப்பதிலும், புதைப்பதிலும் என்ன கருத்து இருக்கும்?

# மனதின் தன்மை

82. மனதால் பற்றும் அனைத்தும் கடந்த காலத்தையே சேர்ந்தது. சத்தியம் எப்போதும் நிகழ்வில் தான் உள்ளது.

83. தேவையற்ற போது செயல் புரியும் ஆசையே கர்மத்தை வரவழைக்கிறது. தேவையான போது செயல்படாமல் இருப்பதும், கர்மத்தையே சேர்க்கிறது.

84. மனம் என்பது ஆத்மாவில் இருந்து உதிக்கும் சக்தியே, என்பதை உணர்ந்தால் துன்பமில்லை.

85. தனிப்படுத்துதல் மனதின் தன்மை. விழிப்புணர்வில் அனைத்தும் அடக்கம்.

86. புத்தியும், மனதும் விஷயங்களை பிரிக்கிறது, ஹ்ருதயம் சேர்க்கிறது.

87. வெளித்தோற்றமான உடலின் செயல் (கை, கால்களின் அசைவு) நிஜமான

செயலல்ல. 'நான் செய்கிறேன்' என்கிற எண்ணமே செயலாகிறது.

88. செயலை பற்றிய எதிர்பார்ப்பும், சிந்தனையுமே செயலை பந்தப்படுத்துகிறது. செயலால் மட்டுமே எந்த பந்தமும் இல்லை.

89. உள், வெளி என்பவை உள்ளது உடல் மற்றும் மனதை குறிப்பு–ஆதாரமாக கொள்வதால் தான். குறிப்பற்ற இடத்தில் உள் எங்கே? வெளி எங்கே?

# மெய்யறிவு

௯0. தன்னுணர்வற்ற வாழ்க்கையே அறியாமை. விழிப்புணர்வுள்ள வாழ்வே அறிவு.

௯1. 'நான் அறியவில்லை' என்பதை உண்மையாகவே அறியும் போது, அனைத்து சாத்தியங்களின் கதவுகளையும் திறக்கிறேன்.

௯2. நல்ல சூழ்நிலையில் எப்போதும் நாம் மகிழ்கிறோம். ஆனால் கடினமான சூழலையும் புன்னகையுடன் ஏற்பதே ஞானமாகும்.

௯3. எவ்வளவு ஸ்ரத்தை (கவனம்) ஒன்றில் வைக்கிறாயோ, அவ்வளவு அதற்கு நீ மதிப்பு கொடுக்கிறாய்.

௯4. எவன் காலத்தையும், வாழ்வையும் மதிக்கிறானோ, அவன் இரண்டையும் கடக்கிறான்.

௯5.எல்லா ஆனந்தத்திற்கும் நாமே ஆதாரமாய் இருந்தும், மறதியால், விஷயங்களில் இன்பம் உள்ளதென வெளியே அலைகிறோம்.

வாழ்வில் துன்பம் வருவது (பொருட்கள் மற்றும் மனிதர்களிடம் இருந்து) இன்பம் அங்கு இல்லை என்பதை தெரிவிக்கவே. நமது தவறான பார்வையே, துன்பம் நிஜம் என்கிற தோற்றத்தை கொடுக்கிறது. இதை கண்டுணர்வது அருளால் மட்டுமே சாத்தியம்.

96. மரியாதையை கேட்டு வாங்க முடியாது. அருகிலுள்ள அனைத்திலும் மதிப்பு வைக்கும் போது, நீ மரியாதைக்கு உரியவனாகிறாய்.

97. நான் 'யாரும் இல்லை' எனும் போது நிலவும் சாந்தியை, எதுவாக ஆனாலும் (எவ்வளவு உயர்ந்த ஒன்றானாலும்) அனுபவிக்க முடியாது.

98. நிஜமான சுதந்திரம் என்பது உடல், மனம் மற்றும் அகங்காரத்திலிருந்து விடுபடுவதே. உடல், மனம், அகங்காரத்தின் சுதந்திரம் அல்ல.

99. சத்தியத்தில் இருந்து கொண்டு, அதன் ஞானத்துடன், சூழ்நிலைகளை எதிர் கொள்வதால் உண்டாகும் படிப்பினைகளை

ஏற்றுக்கொள்வது, உனது சாதனையை சமச்சீராக வைத்து முழுமையடையச் செய்கிறது.

100. நிஜமான கற்றல் ஆரம்பிப்பது, கற்பித்தல் நிற்கும் போது தான்.

101. பேசுபவர்கள் உலகில் அதிகம். அதன்படி நடப்பவர்கள் அரிது. நடப்பவர்கள் மௌனமாய் இருப்பார்கள்.



## கங்கா மா,

அன்புடனும், பக்தியுடனும் எல்லோரும் அழைக்கும் "அம்மா", பகவான் அருளால் ஆட்கொள்ளப்பட்டு, மனித வடிவில் வந்துள்ள சத்திய ஸ்வரூபம். குரு தத்துவத்தின் கருணைக் கடலாகிய அம்மாவின் அளவிலா அருள், பலரையும் அரவணைத்து, அவர்களின் வாழ்வை மாற்றி அமைத்து உள்ளது. குரு, மாதாவின் வடிவில் அபூர்வமாய் இணைந்து, சுத்தமான அன்பையும், உயர்ந்த ஞானத்தையும் தன்னில் கொண்டுள்ளது விசேஷமானது. அம்மாவின் தெய்வீக சாந்நித்தியத்தில் இயல்பாகவே சாந்தியும், மௌனமும் உணரப்படுகிறது.

அம்மா அருளிய வசனங்களில் ஒன்று, **"குரு உன் கேள்விக்கு பதில் அளிப்பதில்லை. அவர் உன்னுள் இருக்கும் விடையிற்கே அழைத்துச் செல்கிறார்"**. உண்மையை அறியும் நோக்கத்துடன் வரும் பல அன்பர்களின் கேள்விகளுக்கு, அம்மா விளக்கமளித்த போது, அவர்களின் பிரத்தியட்ச அனுபவம் இதுவே. வினவியவர்களின் ஐயங்களுக்கு அம்மா ஹ்ருதயத்தில் இருந்து அருளிய உபதேசங்கள், அவர்களின் ஹ்ருதயத்தில் பரவி, அறியாமையை விலக்கி, நேராக உணர்த்திய ஞானத்தின் சிறு தொகுப்பே (101 முத்துக்கள்), இந்த "**ஞான கங்கா**".